**தலைப்பு 08 – தேசிய பொலிஸ் ஆணைக் குழு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 08 – தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்களின் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக் குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக் குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செலயகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 20,916 தொகைக்கான ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திசெம்பர் மாதத்திற்குரிய உறுதிச் சீட்டுக்கள் உரிய காலப் பகுதியில் பொறுப்புக்கள் கூற்றில் உட்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்கு வழிகாட்டலுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2020 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் போது 70 சதவீதத்தை மிகைத்த முறைப்பாடுகளை விசாரணை | வருட ஆரம்பம் முதல் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமையின் காரணமாக பொ.நி. சுற்றறிக்கையின் படி | பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக உச்ச |

| | | | |
|---|---|---|---|
| | செய்யும் முன்னேற்றம் ஒன்று காணப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைத்திருந்த முறைப்பாடுகளின் விசாரணை பூர்த்தி செய்யும் முன்னேற்றம் 27 சதவீதமாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு விசாரணைகள் பூர்த்தி செய்யப்படலின் குறைந்த முன்னேற்ற 7 சதவீதம் வடமாகாணத்திலும் 16 சதவீதம் மத்திய மாகாணத்திலும் காணப்பட்டது. | உத்தியோகத்தர்களை சேவைக்கு அழைத்தல் வரையறுக்கப்பட்டிருத்தல் போக்குவரத்து வசதியீனங்கள் காணப்படல், வீட்டிலிருந்தே கோப்புக்களின் கடமைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தேவையான அறிக்கைகள் மற்றும் கடிதங்கள் அச்சிடுவதற்கு தேவையான கணினி வசதிகள் காணப்படாமையால் அதற்காக அலுவலகத்திற்கு வர வேண்டிய நேரிட்டமை, மத்திய மாகாண அலுவலகத்தில் அனைத்து விசாரணை அலுவல்களும் மேற்கொள்வதற்கு ஒரு விசாரணை உத்தியோகத்தர் மாத்திரம் காணப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | மட்டத்தினை ஆக்கிக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | மேற்கு I, II, தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்காக கூடிய எண்ணிக்கையான முறைப்பாடுகள் மொத்த முறைப்பாடுகளில் 21 உம் 18 உம் 15 மற்றும் 10 சதவீதங்கள் காணப்பட்டிருந்ததுடன், விசாரணை பூர்த்தி செய்யப்பட்ட முன்னேற்றம் 27 உம் 31 உம் 29 மற்றும் 27 சதவீதமாகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | மேல் மாகாணம் I, II, அலுவலகங்களுக்கு கிடைக்கக் கூடிய முறைப்பாடுகளின் எண்ணிக்கையின் படி அதன் கடமை அலுவல்கள் மேற்கொள்வதற்குரிய உத்தியோகத்தர்கள் போதியளவாக காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | மாகாண அலுவலகங்களில் பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை மேற்கொள்ளல் உச்ச மட்டத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | முறைப்பாடுகளின் தன்மையின் படி பொலிஸினால் செயற்படாமை, அதிகாரத்தை தவறான வழியில் பயன்படுத்தல் மற்றும் பக்கசார்பாக இருத்தல் ஆகிய முறைப்பாடுகள் கூடிய எண்ணிக்கையானவை கிடைத்திருந்ததுடன் அவை மொத்த கிடைத்திருந்த எண்ணிக்கைகளில் 31 , 24 மற்றும் 20 சதவீதமாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டு இறுதி அளவில் அந்த முறைப்பாடுகளை தீர்த்தலின் முன்னேற்றம் 24, 23 மற்றும் 22 ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | முறைப்பாட்டாளர்களிடம் மேலதிக தகவல்கள் பெற்றுக் கொள்வதில் தாமதம் அடைதல் மற்றும் பொலிஸ் நிலையங்களினால் அழைக்கப்படும் பகுதிகள் மற்றும் அறிக்கைகள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கப் பெறாமை மற்றும் அவற்றில் குறைபாடுகள் காணப்படும் சந்தர்ப்பங்கள் அனேகம். இது தொடர்பாக பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்வதனை உச்ச மட்டத்தில் ஆக்கிக் கொள்ள வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 திகதிய 2/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இற்கு இணங்க அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிட்டுருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையில் உட்படுத்தி முன்னை ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்டவாறு வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு எதிர்காலத்தில் பாராளுமன்றத்திற்கு மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 2/2020 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையில் பந்தி 10.2 இற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடமை கையடக்கத் தொலைபேசி ஒன்று 2022 ஏப்ரல் 12 திகதி காணாமல் போயிருந்தது. 2022 நவம்பர் 18 திகதி ஆரம்ப விசாரணைகள் நி.பி. 105 இற்கு இணங்க காணாமல் போன கையடக்கத் தொலைபேசியின் தற்போதைய பெறுமதி ரூபா 71,249 தொகையென இனங்கண்டிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த நட்டத்தை அறிவித்திருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் ஆரம்ப விசாரணை நடைபெற்றிருந்த போதிலும், அறவீடு செய்ய வேண்டிய தொகை தொடர்பாக தீர்மானிக்கப்பட்டிருக்காமையால் அது தொடர்பாக 2022 நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்படவில்லை என அறிவிக்கின்றேன். | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்ட சேதம் அறிவிக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 40 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஆணைக் குழுவுக்காக உள்ளகக் கணக்காய்வு அலகொன்று நிறுவப்பட்டு இருக்காமையால் மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படவில்லை | உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவரை இணைக்கும் படி நியமன அதிகாரிக்கு பல சந்தர்ப்பங்களில் விண்ணப்பித்த போதிலும் உத்தியோகத்தர் ஒருவர் வழங்காமையால் உள்ளக கணக்காய்வு பிரிவு நிறுவுவதற்கு முடியாமல் இருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 40 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் சிரேஷ்ட மட்ட 30 பதவிகளில் 15 எனப்படும் 50 சதவீதம் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அவற்றில் சிரேஷ்ட உதவிச் செயலாளர், பிரதிப் பணிப்பாளர் பிரதான விசாரணை உத்தியோகத்தர், சட்ட உத்தியோகத்தர் உள்ளகக் கணக்காய்வாளர் ஆகிய பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. இந்த நிலைமை முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் தாமதத்திற்கு காரணமாக இருக்க முடியும் என அவதானிக்கப்பட்டது. | ஆணைக் குழுவின் அலுவல்களை தாமதமின்றி நடாத்திச் செல்வதற்காக வெற்றிடங்களை நிரப்பும் வரை அல்லது ஒரு வருட காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கும் படி ஜனாதிபதி செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டு விவகார, மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு, அரச சேவைக்கு ஆட்சேர்க்கும் செய்முறையின் மீளாய்வு செய்யும் அமைச்சரவை உத்தியோத்தர் குழுவிடமும் அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும் இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | செயலாற்றுகையை முன்னேற்றுவதற்கு போதியளவு பதவியணி ஒன்றினை இணைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இரண்டாம் தரப் பதவியில் 34 சதவீத வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் தகவல் தொழிநுட்ப உதவியாளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அது நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என அவதானிக்கப்பட்டது. | பல்வேறு சந்தர்ப்பங்களில் வெற்றிடங்களை நிரப்பும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை போதியளவு உத்தியோத்தர்கள் இணைக்கப்பட்டிருக்காததுடன், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிகளில் 12 பதவிகள் மாத்திரம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | செயலாற்றுகையை முன்னேற்றுவதற்கு போதியளவு பதவியணி ஒன்றினை இணைக்க வேண்டும். |
| (இ) | ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்கள் தொடர்பாக மீண்டும் சேவையில் ஈடுபடுத்துதல் 2018 பெப்ரவரி 20 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2018 இன் பந்தி 02 (iv) இணங்க எத்தகைய காரணத்தினாலும் 67 வயதை பூர்த்தி செய்த எவரையேனும் அரச சேவை பதவி ஒன்றிற்கு நியமனம் செய்யக் கூடாது என இருந்த போதிலும் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் மேல் மாகாண பணிப்பாளர் பதவிக்கு 2022 மார்ச் 02 திகதி முதல் 2023 மார்ச் 01 திகதி வரை ஒப்பந்த அடிப்படையில் 67 வயதை பூர்த்தி செய்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் மாதாந்தம் ரூபா 60,000 வீதம் குறிப்பிட்ட ஆண்டிற்காக ரூபா 720,000 தொகை சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. | மேல் மாகாணத்திற்காக எதிர்பார்ப்பு பதிவேட்டில் மிகவும் கூடிய புள்ளிகள் பெற்றிருந்த உத்தியோகத்தர் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் மூலம் கிடைத்த அங்கீகாரத்தின் மீது 2022 மார்ச் 01 திகதி முதல் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் மேல் மாகாண பணிப்பாளர் என ஒரு வருட காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டது எனவும் 3/2018 சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படுவதற்கு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |